

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (17.6.2025) சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டத்தில் 40.27 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தடுப்பணை கட்டும் பணியினை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன், சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஆ.தமிழரசி ரவிக்குமார், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித், காவல் கண்காணிப்பாளர் ஆஷிஷ் ராவத் , நீர் வளத்துறை கண்காணிப்பு பொறியாளர் ஆர்.தங்கராஜ், செயற்பொறியாளர் எஸ்.ரமேஷ் உள்பட விவசாய பெருமக்கள் உடனிருந்தனர்.

### சிவகங்கை மாவட்டம் திருப்புவனத்தில்

# துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமை!

சிவகங்கை, ஜூன் 18 -

சிவகங்கை மாவட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் நேற்று 17ம்தேதி சுற்றுப்பயணம் மேற்கொண்டார் .மதுரையில் இருந்து கார் மூலம் வருகை தந்த துணை முதலமைச்சருக்கு திருப்புவனம் நரிக்குடி சாலையில் மாவட்ட கழகச் செயலாளரும் அமைச்சருமான கே.ஆர். பெரிய கருப்பன் தலைமையில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. முதலாவதாக அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன் பட்டு வேட்டி கொடுத்து வரவேற்றார் . அதனைத் தொடர்ந்து துணை முதலமைச்சரை முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், திருமதி தமிழரசிரவிக்குமார் எம்.எல்.ஏ. மாவட்ட துணை செயலாளர்கள் த.சேங்கைமாறன், திருமதி ஜோன்ஸ் ரூசோ , அவைத் தலைவர் அ.கணேசன், முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் சுபமதியரசன், எஸ்.மாரியப்பன்கென்னடிசெயற்குழு உறுப்பினர் தா.ராமையா,, நகர்கழகச் செயலாளர் கள் சி.எம்.துரை.ஆனந்த், க. பொன்னுச் சாமி பெரி. பாலா காரைக்குடி மாநகரச் செயலாளர் நா. குணசேகரன்,மேயர் எஸ்.முத்துதுரை,

ஒன்றிய செயலாளர் கள் திருமது வசந்தி சேங்கைமாறன், எம்.ஏ. கடம்பசாமி, சுப்பிரமணியன், துரை.ராஜாமணி, மா.அண்ணா துரை, எம்.ஜெயராமன், திருமலை முத்து ராமலிங்கம், யோக. கிருஸ்ணகுமார், வே.ஆரோக்கியசாமி, ஆர்.எம்.கென்னடி, வே.தமிழ்மாறன்,ஆறு.செல்வராசன்,கா.வெங்கட்ராமன்,நாகனி ரவி , லெ.மு. ரவிச்சந்திரன், சுப. சின்ன துரை, வே. பூபாலசிங்கம், கே.பாலசுப்பிரமணியன், பூமணி, நா.நெடுஞ்செழியன், பெ. மந்தக்காளை, எஸ்.சண்முகவடிவேல், விராமதிமாணிக்கம், குன்றக்குடி சுப்பிரமணியன், அ.முத்துச்சாமி, மானா மதுரை நகர் மன்ற துணை தலைவர் பாலசுந்தர் ,நிர்வாகிகள் எஸ் .முத்துக்குமார், சேவியர், ஆர்.கோதண்டபாணி , ஆர்.வி.எஸ். அரங்கநாதன், மகளீரணி வி.எஸ்.எம்.எஸ்தர் மேரிஸ்டிபன்மற்றும் பேரூர் கழக செயலாளர்கள் பொதுக்குழு உறுப்பினர்கள் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார், துணை அமைப்பாளர்கள் கே. எம். பொற்கோ, கிங் . கார்த்தி ,சேதுபதி ராஜா, பரணிக்கிட்டு, எஸ். எம். மதிவாணன் ,மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன்,

மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் திருமதி ஹேமலதா செந்தில், மகளீரணி நிர்வாகிகள் திலகவதி கண்ணன் மார்க் ரெட் கமலா,மற்றும் சார்பு அணி நிர்வாகிகள் வரவேற்றார்கள். அதணை தொடர்ந்து துணை முதலமைச்சர் திருப்புவனம் தாலுகா கானூரில் ரூபாய் 41கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் தடுப்பணை திட்டப்பணியினை பார்வையிட்டார்.

அதனைத் தொடர்ந்து சிவகங்கை முதல் நகர் மன்ற தலைவர் கழக மூத்த முன்னோடி சொ.லெ. சாத்தையா வீட்டிற்கு சென்று அவரது உடல்நலம் குறித்து விசாரித்தார். அவரது மனைவி லீலாவதி மரணம் குறித்து ஆறுதல் கூறினார்.

துணை முதலமைச்சரை சொ. லெ.சாத்தையா மகன் அன்பழகன் மற்றும் குடும்பத்தினர் வரவேற்றார்கள். துணை முதலமைச்சருடன் அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன், முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், திருமதி தமிழரசிரவிக்குமார் எம்.ல்.ஏ. மாவட்ட கழக துணைச் செயலாளர் த.சேங்கைமாறன், சிவகங்கை நகர் கழக செயலாளர் சி.எம்.துரை.ஆனந்த், முன்னாள் எம்எல்ஏ எஸ்.மாரியப்பன் கென்னடி ஆகியோர் சென்றிருந்தார்கள்.

தொடர்ந்து துணை முதலமைச்சர் சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா அஜித் தலைமையில் மாவட்ட அளவில் நடைபெறும் திட்ட பணிகள் அதன் முன்னேற்றம் குறித்து அரசு அலுவலர்களுடன் ஆய்வு நடத்தினார். . அதனைத் தொடர்ந்து கலெக்டர் அலுவலகத்தில் அமைந்துள்ள பிரம்மாண்ட மேடையில் மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா அஜித் தலைமையில் 500க்கும் மேற்பட்ட நபர்களுக்கு பல்வேறு அரசுத் துறைகளில் சார்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் கூட்டுறவு த்துறை அமைச்சர் கே ஆர்.பெரியகருப்பன், எம் .எல் .ஏக்கள் திருமதி தமிழரசி ரவிக்குமார் எஸ்.மாங்குடி, சிவகங்கை நகர் மன்ற தலைவர் சி.எம்.துரை.ஆனந்த், திருப்புவனம் மன்ற தலைவர் த.சேங்கைமாறன், மற்றும் அரசு துறை அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

துணைமுதலமைச்சர் வருகையை முன்னிட்டு சிவகங்கை மாவட்ட எல்லையான பூவந்தியிலிருந்து திருப்பத்தூர் வரை சுமார் 75 கிலோமீட்டர் தூரம் வரை கழகம் கொடிகள் மற்றும் கொடி தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

அதனைத் தொடர்ந்து மாலை 4 மணி அளவில் திருப்பத்தூர் சிவகங்கை சாலையில் உள்ள தனியார் மகாலில் மாவட்ட கழக செயலாளர் கூட்டுறவு துறை அமைச்சர் கே ஆர்.பெரியகருப்பன் தலைமையில் அனைத்து மாவட்ட அணி நிர்வாகிகள் துணை நிர்வாகிகளுக்கு தேர்தல் பணி குறித்து ஆலோசனை வழங்கினார். அதனைத் தொடர்ந்து ஆர். கே. மகாலில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்,துணை அமைப்பாளர்கள், ஒன்றிய, நகர, பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர் துணை அமைப்பாளர்களுடன் தேர்தல் பணி குறித்து ஆலோசனை வழங்கினார் .

இந்த நிகழ்ச்சியில் கூட்டுறவுத் துறை அமைச்சர் கே ஆர்.பெரியகருப்பன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார் , முன்னாள் அமைச்சர் மு.தென்னவன்,திருமதி தமிழரசிரவிக்குமார் எம்.எல்.ஏ. மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள் . பின்னர் துணை முதலமைச்சர் மதுரைக்கு புறப்பட்டுச் சென்றார்.



கழக இளைஞர் அணி செயலாளர் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தேனி மாவட்டத்தில் நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக விமானம் மூலம் மதுரை விமான நிலையம் வந்த அவருக்கு அமைச்சர் பெருமக்கள் ஐ.பெரியசாமி, பி.மூர்த்தி, மாவட்டச் செயலாளர்கள் கோ.தளபதி எம்எல்ஏ, சேடபட்டி மு.மணிமாறன், தேனி தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி., கம்பம் ராமகிருஷ்ணன், ஐ.பி.செந்தில்குமார் எம்.எல்.ஏ., சட்டமன்ற உறுப்பினர்கள் சோழவந்தான் ஆ.வெங்கடேசன், பெரியகுளம் சரவணக்குமார், மதுரை மாநகராட்சி மேயர் இந்திராணி மற்றும் முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், இளைஞர் அணி மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், கழகத்தினர் என பெரும் திரளானோர் பங்கேற்று வரவேற்றார்கள்.



முதலமைச்சர் அவர்களின் புதிய விரிவான மினி பேருந்து திட்டத்தில் புதிய வழித்தடங்கள் மற்றும் புலம்பெயர் வழித்தடங்களுக்கான மினி பேருந்து சேவைகளை நெல்லை பெரியார் சந்திப்பு பேருந்து நிலையத்தில் நடைபெற்ற நிகழ்வில் சட்டப்பேரவை தலைவர் முஅப்பாவு,நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, மீன்வளம் – மீனவ நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் ஆகியோர் பங்கேற்று மாவட்ட ஆட்சியர் மரு.இரா. சுகுமார்,நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன், மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ மாநகராட்சி மேயர் ராமகிருஷ்ணன், ஆணையாளர் சுகபுத்ரா,துணை மேயர் ராஜ்,முன்னாள் அமைச்சர் டி.பி.எம்.மைதீன்கான் ஆகியோர் முன்னிலையில் கொடியசைத்து துவக்கி வைத்தனர்.

### அனைத்துப் பேருந்து நிலையங்களையும்

# புதுப்பொலிவுடன் இடித்துக் கட்டி தி.மு.க. ஆட்சி புரட்சி!

**நாகர்கோவில், ஜூன் 18 -**

**அனைத்துப் பேருந்து நிலையங்களையும் புதுப்பொலிவுடன் இடித்துக்கட்டி தி.மு.கழக அரசு புரட்சி செய்து வருகிறது. இது குறித்து பேருந்து பயணி சங்கரன் கோவில் அருணகிரி தனது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளதாவது:**

நாகர்கோவில் வடசேரி பேருந்து நிலையம் ஒரு காலத்தில் பாழடைந்து கிடந்தது. இப்போது புதுப்பொலிவு பெற்று இருக்கின்றது.

இந்தியாவில் முதன்முறையாக 1970களில் தனியாரிடம் இருந்த பேருந்துகளைக் கைப்பற்றி தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தைத் தொடங்கியவர் கலைஞர் அவர்கள்,

இன்றைக்கு உலகத்திலேயே பெரிய போக்குவரத்து நிறுவனம் அதுதான்.

22,000 பேருந்துகள். தமிழ்நாட்டில் மட்டும்தான் விடிய விடிய பேருந்துகள் ஒடுகின்றன.

கேரளாவில் இரவு எட்டு மணியோடு சரி. வட இந்தியாவில் பகலில் கூடப் பேருந்துகள் கிடையாது.



தமிழ்நாட்டில் உள்ள அத்தனைப் பேருந்து நிலையங்களையும் இடித்து புதியதாக கட்டி வருகிறார்கள் இது தி.மு.க. ஆட்சிப் புரட்சி என்று அருணகிரி குறிப்பிட்டுள்ளார்.



மதுரை மாவட்ட ஆயுதப்படை மைதானத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் புதிய விரிவான சிற்றுந்து திட்டத்தின் கீழ் 32 சிற்றுந்து வழித்தடங்களுக்கான அனுமதி ஆணைகளை வழங்கி சிற்றுந்து சேவையினை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் ஆகியோர் துவக்கி வைத்தார்கள். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் சங்கீதா, மாநகராட்சி மேயர் இந்திராணி பொன் வசந்த், மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் பூமிநாதன், மாநகராட்சி துணை மேயர் நாகராஜன், இணை போக்குவரத்து ஆணையர் சத்திய நாராயணன், வட்டார போக்குவரத்து அலுவலர்கள் கார்த்திகேயன், பாலமுருகன், சித்ரா உள்ளிட்ட உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள், அதிகாரிகள் பங்கேற்றனர்.